1974 மார்ச் 30]

திரு. நா. வீராசாமி : தமிழ் நாட்டில் மின்சாரப் பற்றுக்குறை இருக்கிறது. பல தொழிற்சாலைகளில் இன்ஸ்டால்டு கபாஸிடியை விட அதற்குப் பின்னுலே அரசாங்கத்திற்குத் தெரியாமல் அந்தக் கபாஸிடியை இன்க்ரீஸ் செய்துகொள்கிருர்கள். உதாரணமாக, தொழில் ஆரம்பிக்கிற நேரத்தில் 25 எச். பி. இயந்திரங்களைப் பொருத்துகிருர்கள். அதற்குப் பின்னுலே விரிவுபடுத்துகிற நேரத்தில் 50 எச். பி., 75 எச். பி.யாக இன்க்ரீஸ் செய்துவிடுகிருர்கள். அரசாங்கத்தினிடமோ அல்லது இலாகாவினிடமோ எந்த அனுமதியையும் வாங்காமலே சிறு தொழிற்சாலைகளில் அப்படிச் செய்கிருர்கள். அப்படிப்பட்ட இயந்திரங்களையெல்லாம் கண்டுபிடித்து அதற்கான ஆய்வையும் இந்த டெக்னீஷியன்ஸ் செய்வதற்கு ஏதாவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது லாபரட்ரி. இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் இருக்கக்கூடிய தொழில் கூடங்களுக்கு பெரிய இயந்திரங்களைக் கொடுத்து டெஸ்டு செய்ய உதவி செய்யக் கூடிய லாபரட்ரி.

Weavers of Chinnalappatti

*698 *Q.*—Thiru N. DENNIS
Thiru N. K. PALANISAMY : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that there has been large scale migration of weavers from Chinnalapatti in Madurai district to other places ; and

(*b*) if so, the action taken to prevent such migration ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1973 அக்டோபர் மாதத்தில் சில நெசவாளர் குடும்பங்கள் சின்னுளப்பட்டியை விட்டு வேறு இடங்களுக்கு வாழ வழிதேடிச் சென்றன.

(இ) மாநிலத்திற்கான ஒதுக்கீட்டிலிருந்து கூடுமானவரை செயற்கைப் பட்டு நூல் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

திரு. என். டென்னிஸ் : அவர்கள் வேலைவாய்ப்புப் பெறவும், அவர்களுக்கு வாழ்க்கை வசதி அளிக்கவும் இன்டரஸ்ட்-ப்ரீ லோன் கொடுக்கவும் லோன் அதிகமாக வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். எத்தனை பேர் அந்தத் தொழிலிலிருந்து பாதிக்கப் பட்டிருக்கிருர்கள் என்பதையும் அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்களுக்குக் கடன் கிடைக்கவில்லை என்ற குறை இல்லை. செயற்கைப் பட்டு கிடைக்காத காரணத்தினுல் இடைக்காலத்தில் ஏற்பட்ட ஒரு சிறு நிகழ்ச்சி.

திரு. என். கே. பழனிசாமி : அக்டோபர் மாதத்தில் ஒரே நாளில் மட்டும் 2,500 பேர் விழுப்புரத்திலிருந்து சென்னை வந்தவர்களை சர்க்கார் கைது செய்தார்கள் என்று பத்திரிகைகளில் செய்தியைப் பார்த்தோம். 2,500 பேர்களுக்கும் பின்னர் புனர்வாழ்வு அளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில செய்திகள் மிகவும் மிகைப் படுத்துகின்றன. செயற்கைப் பட்டைப் பொறுத்த அளவில் நாடு முழுவதும் ஏற்பட்ட பற்ருக்குறை நமக்குத் தெரியும். தமிழ் நாட்டில் தேவையான உற்பத்தி இல்லை. வெளி மாநிலங்களிலிருந்து நமக்கு வரவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, சின்னுளப்பட்டியில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடை பெற்றது. உடனே மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே சென்று அவர் களுக்கு உதவி செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

Art Silk Ribbon Industry

*699 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Art Silk Ribbon Manufacturing Industries at Komarapalayam are facing crisis as a result of the increasing prices of art silk ; and

(*b*) if so, the steps taken to meet the situation ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) செயற்கைப் பட்டின் நடப்பு விலையில் உயர்வு மட்டுமின்றி, ரிப்பன் தயாரிப்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட அளவு குறைக்கப்பட்டதாலும், குமாரபாளையத்தில் செயற்கைப் பட்டு ரிப்பன் தொழிலில் நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது.

(இ) 1973–74ஆம் ஆண்டில் தமிழ்நாடு வட்டாரக் குழுவிடமிருந்து கட்டுப்பாடான விலையில் 3,000 கிலோகிராம் செயற்கைப் பட்டு குமாரபாளையத் திலுள்ள ரிப்பன் தயாரிப்பாளர் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : இதன் மூலமாக எத்தனை பேர் வேலை இழந்து இருக்கிருர்கள், அவர்களுடைய வேலை பாதிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வேலை பாதிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் இல்லை.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : செயற்கைப் பட்டு இந்த மாநிலத்திற்குப் போதிய அளவு கிடைக்கவில்லை என்ற காரணத்திஞல் நெசவாளர்கள்மற்ற தொழிலில் ஈடுபடுகிற அளவுக்குக் கஷ்டமாக இருக்கிறது.